DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

STC No. 703/22 Crime No. 120/22 Station BHAVANI

| | | | |
|---|---|---|---|
| Name | PW6-திரு. கோவிந்தசாமி | Caste | |
| Father Name | நல்லாகவுண்டர் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 49 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 16.10.2023 |

**எதிரி சந்திரா ஆஜர்.**

**முதல் விசாரணை-**

1) நான் அந்தியூர் மாவிளக்கு மாரியம்மன்கோவில் வீதியில் குடியிருந்து கொண்டு பவானி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.03.2022 அன்று மாலை சுமார் 3.00 மணியளவில் நானும், என்னுடன் வழக்கறிஞராக இருந்த திரு.எஸ்.ஆர்.விஜயகுமார், திரு.எஸ்.ராமசாமி மற்றும் இன்னும் சில வழக்கறிஞர்கள் மேற்படி நீதிமன்ற அலுவலகத்தில் பணியில் இருந்தோம். அப்போது மாவட்ட உரிமையியல் நீதிமன்ற தலைமை எழுத்தாளர் திருமதி.சாந்தி பணிபுரியும் அலுவலக பகுதியிலிருந்து அதிகமாக சத்தம் கேட்டதால், சென்று பார்த்தோம். அப்போது ஆஜர் எதிரி மேற்படி தலைமை எழுத்தரை பணி செய்ய விடாமல் தகாத வார்த்தையில் திட்டிக்கொண்டு வளாகத்தில் நடந்து கொண்டிருந்தார். நானும், மற்ற வழக்கறிஞர்களும் மேற்படி எதிரியிடம் பணியிலிருக்கும் அரசு அலுவலரிடம் தகாத வார்த்தைகளில் பேசக்கூடாது என்றும், எதுவா இருந்தாலும் முறைப்படி பேசிக்கொள்ளுங்கள் என்று அறிவுறுத்தினோம். ஆனால், ஆஜர் எதிரி அதை பொருட்படுத்தாமல் மீண்டும் எழுத்தரிடம் நீயெல்லாம் ஒரு பொம்பளையா உருப்படியாகமாட்டாய் என்று சத்தம் போட்டார். அப்போது நான் யார் இவர் எதற்காக நீதிமன்ற அலுவலரிடம் இவ்வாறு தகாத வார்த்தைகள் பேசிக்கொண்டிருக்கிறார் என்று திருமதி.சாந்தியிடம் கேட்டதற்கு மேற்படி திருமதி.சாந்தி என்னிடம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.147/2013 என்ற வழக்கு கொளந்தவேல் என்பவர் பாட்டப்பன் மீது தாக்கல் செய்திருந்ததாகவும், அவ்வழக்கு கடந்த 30.04.2014 ல் தீர்ப்பாகி விட்டது என்றும், மேற்படி அசல் வழக்கில் தரப்பினராக இல்லாத ஆஜர் எதிரி அவர் தாக்கல் செய்த மனுக்கள் ரிட்டர்ன் ஆனது குறித்து நீதித்துறை அலுவலரிடம் அடிக்கடி தகராறில் ஈடுபட்டு வருவதாக கூறியும், அன்றைய தினம் 23.02.2022 ல் திருப்பப்பட்ட மனு குறித்து விவாதம் செய்து எதற்காக மனுவை ரிட்டர்ன் போட்டீர்கள் என்று தகராறு செய்வதாகவும், இது சம்மந்தமாக நீதிமன்ற ஊழியர் திரு.ஆடலரசு, திருமதி.கலைச்செல்வி, திரு.ஆனந்தபட் ஆகியோர்கள் மனுவை உரிய முறையில் பலகை எழுத்தரிடம் கேட்டு திரும்ப பெற்று கொள்ளுங்கள் என்று கூறியும், அதை கேட்காமல் மேற்படி ஆஜர் எதிரி, தலைமை எழுத்தரிடம் எதற்காக மனுவை திரும்ப ரிட்டர்ன் போட்டீர்கள் என்றும் கேட்டு, பிரச்சனை செய்ததாகவும், இது குறித்து பலகை எழுத்தர் வந்தவுடன் உரிய விளக்கம் கேட்டு

உங்களுடைய மனுவை திருப்பி தருகிறேன் அதுவரையில் அலுவலகத்தின் வெளியில் இருங்கள் என்று கூறிவிட்டு, தலைமை எழுத்தர் அவரது அலுவலகத்திற்கு எதிரில் உள்ள கழிவறைக்கு செல்லும்போது நீயெல்லாம் ஒரு பொம்பளையா, உன்னை வெளியே வா பார்த்துக்கொள்கிறேன் என்றும், கடவுள் இருக்கிறார் பார்த்துகொள்வார் என்றும் சாபமிட்டதாகவும், அந்த சத்தம் கேட்டு நீதிமன்றத்தில் உள்ள மற்ற அலுவலர்களும், காவல் உதவி ஆய்வாளரும் வந்து நீதிமன்ற பணியாளரிடம் தகாத முறையில் பேசக்கூடாது என்று எச்சரிக்கை செய்தபோது காவல் உதவி ஆய்வாளரை பார்த்து உன்னை யார் என்னை கேள்வி கேட்க, நீங்கள் அமைதியாக சென்றுவிடுங்கள் என்று அவரையும் மிரட்டும் தோணியில் பேசி, சத்தம் போடவே, உடனடியாக தலைமை எழுத்தர், திரு.ஆடலசுவிடம் அலுவலக பீரோவிலிருந்த ரிட்டர்ன் ஆன மனுவை எடுத்து ஆஜர் எதிரியிடம் கொடுத்துவிடுங்கள் என்று கூறியதாகவும், அதை வாங்கி படித்துவிட்டு ஆஜர் எதிரி இப்படியெல்லாம் மனுவை ரிட்டர்ன் போடுவார்களா, ஏன் நீதிபதி இதை பார்க்கமாட்டாரா என்றும், நீங்கல்லாம் உருப்படியாகமாட்டீர்கள் என்றும் அதிக சத்தம் போட்டுக்கொண்டு வரவே, இது குறித்து சம்மந்தப்பட்ட நீதிபதியிடம் தகவல் தெரிவித்து, நீதிபதியும் மேற்படி சம்பவம் குறித்து விசாரிப்பதற்காக மாடிப்படியின் வழியே வரும்போது நீதிபதியை பார்த்து ஆஜர் எதிரி வேகமாக மனுவை ரிட்டர்ன் போட்டது குறித்து அப்போது சத்தம் கேட்டு பணியிலிருந்த பவானி, காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.குமரேசன் மற்றும் நீதிமன்ற ஊழியர்கள் அனைவரும் வரவே, ஆஜர் எதிரியை உதவி ஆய்வாளர் திரு.குமரேசன் அழைத்து சென்றுவிட்டார் என்றும், மேற்படி சம்பவம் குறித்து நான் பவானி காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளதாகவும், மேற்படி புகாரில் போலீசார் விசாரித்து சென்றனர் என்றும், மேற்படி சம்பவம் குறித்து 25.03.2022 ல் பவானி காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள், நான் நடந்த விவரங்களை கூறினேன்.

**எதிரியால் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

1) நீதிமன்றத்தில் சாட்சி சொல்வதற்கு நேற்றைய தினம் எனக்கு அழைப்பாணை வந்தது. சம்பவம் நடந்ததாக சொல்லபடும் நேரத்தில் நான் பவானி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞராக பணியாற்றி வந்தேன், தற்போதும் பணியாற்றி வருகிறேன். O.S.No.147/2013 வழக்கு 2014 ம் ஆண்டு தீர்ப்பாகி உள்ள விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் அந்த வழக்கை குழந்தைவேலுவிற்காக முதலில் வழக்கறிஞர் திரு.கோடீஸ்வரன் என்பவர் நடத்தி வந்து அதன்பிறகு நான்தான் ஆஜராகி நடத்தினேன். திருமதி.சாந்தி அளித்த புகாரின்பேரில் பதியப்பட்ட முதல் தகவல் அறிக்கையை நான் பார்க்கவில்லை, அதன் சங்கதிகள் திருமதி.சாந்தி கூறிதான் எனக்கு தெரியும். திருமதி. சாந்தி எப்போது நடந்தது என்று சொன்னார்கள் என்றால் சம்பவம் நடந்த அன்றே சொன்னார்.திருமதி. சாந்தி புகார்மனுவை டைப் செய்ததை நான் பார்க்கவில்லை.

2) என்னை விசாரித்த விசாரணை அதிகாரி யார் என்றால் காவல் உதவி ஆய்வாளர் திருமதி.மகேஸ்வரி ஆவார், அவர் சம்பவம் நடந்த மறுநாள் 25.03.2022 அன்று விசாரித்தார். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பிறகு என்னை விசாரித்தார். நீதிமன்றத்தில் எந்தெந்த இடங்களில் CCTV கேமராக்கள் உள்ளன என்று எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் சொல்லி

உள்ள தகவல்கள் முன்னுக்கு பின் முரணானவை என்றாலும், இவ்வழக்கின் புகார்தாரரே நான் கூறியவாறு எவ்வித குற்றச்சாட்டையும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. O.S.No.147/2013 வழக்கில் ஆஜர் எதிரி தரப்பினர் இல்லை எவ்வாறு சொல்கிறேன் என்றால் மேற்படி ஆஜர் எதிரி தரப்பினர் இல்லை என்று திருமதி.சாந்தி கூறினார். சம்பவத்தன்று மாலை 04.00 மணிக்கு மேல்தான் எதிரி நீதிமன்றத்திற்குள் வந்தார் என்றாலும், நான் 03.00 மணிக்கு சம்பவம் நடந்ததாக பார்த்தேன் என்று சொல்வது பொய் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**